1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை ஆரம்பிக்கப்பட்டு மேல் தளம் வரை கட்டப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் இந்தப் பணி முடிக்கப்படும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து இருக்கிறார்.

மாவட்ட அளவில் அதிகாரிகள்— ஆசிரியர்கள் அடங்கிய கல்விக் குழுவினை அமைக்கும் திட்டம்

117—(*வினா எண். 19226)—திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் மற்றும் திரு சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் அதிகாரிகள்-ஆசிரியர்கள் அடங்கிய கல்விக் குழுவை அரசு அமைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அவ்வப்போது ஏற்படும் ஆசிரியர்களின் குறைகளைக் களைய கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவிலான மூன்றடுக்கு ஆசிரியர் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்தது. அதில் கல்வி மாவட்ட ஆசிரியர் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆகியவற்றின் ஆசிரியர்களுக்கானது).

1.	மாவட்டக் கல்வி அதிகாரி ..	தலைவர்.
2.	கல்வி மாவட்ட தலைமையிடத்து உதவிக் கல்வி அலுவலர்.	உறுப்பினர். செயலாளர்.
3.	கல்வி மாவட்டத்திலுள்ள அனைத்து உதவிக் கல்வி அலுவலர்கள்.	உறுப்பினர்.
4.	அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் கல்வி மாவட்ட அமைப்பின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் இருவர் (ஆசிரியர் பணியில் உள்ளவர்கள்).	உறுப்பினர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமனம் செய்யப்பட்ட கல்வி பணியில் சிறந்தவர்கள் இருவர் (ஒருவர் பெண்மணியாக இருத்தல் வேண்டும்).	உறுப்பினர்.
6. பள்ளிக் கல்வி இயக்குநரால் நியமனம் செய்யப்பட்ட பெற்றோர்-ஆசிரியர் கழகம் மற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதி இருவர் (ஒருவர் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவராயிருத்தல் வேண்டும்).	உறுப்பினர்.
7. தமிழ்நாடு பட்டதாரி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் கல்வி மாவட்ட அமைப்பின் நிர்வாக பொறுப்பில் உள்ள தற்போது பணியாற்றும் இரண்டு பி. டி. ஆசிரியர்கள் அதே போல் தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி பிரதிநிதிகள் ஆசிரியர் பணியில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.	உறுப்பினர்.

திரு சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழகத்தை அமைத்ததற்காக அந்த ஆசிரியர் வட்டாரமே நன்றியை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் நான் கேட்க விரும்புவது இந்தக் குழுவை அமைத்ததன் மூல நோக்கம் ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுகின்ற எல்லாப் பிரச்சினைகளையுமே அந்த குழுவின் முன்னால் வைத்து பேசித் தீர்க்க வேண்டிய நிலையில் அந்த நோக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவை ஏற்படுத்தியதன் நோக்கம் ஆசிரியர்களுடைய எல்லாப் பிரச்சினைகளையும் அந்த அளவில் தீர்க்க முடியாது. ஆனால் கல்வி மாவட்ட அளவில் தனிப்பட்ட ஆசிரியர்கள் பிரச்சினைகள் பல இருக்கின்றன. அவர்களுடைய பதவி உயர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், சம்பளம் சம்பந்தப்பட்டவை, சம்பள பாக்கி சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் தீராத நிலையில் இருக்கின்றன. இதற்காக அவர்கள் சென்னை மற்றும் வேறு இடங்களுக்கு வந்து அவர்கள் அதைப் பற்றி குறைகளைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதைக்

1984 பிப்ரவரி 22]

குறைப்பதற்காகவும், தீர்ப்பதற்காகவும் அந்த அந்த மாவட்டத்திலேயே இப்படிப்பட்ட ஆலோசனைக் குழுவை கூட்டி ஆசிரியப் பெருமக்களிடத்தில் இருக்கின்ற, தனிப்பட்ட, நீண்ட நாள் தீர்க்கப்படாமல் இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து உடனடியாகத் தீர்க்கவும் ஆசிரியர்கள் மத்தியில் ஒரு மன நிறைவு ஏற்படுத்தவும் இந்தக் குழுவை பயன்படுத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

திரு. சி. கணேசன்: பேரவைத் தலைவரவர்களே, பிரச்னைகள் ஏற்படும்பொழுதுதான் இந்தக் குழு கூட வேண்டுமென்ற நோக்கம் இருக்கிறதா? அல்லது வருடத்தில் இத்தனை தடவைகள் கண்டிப்பாகக்கூட வேண்டும், பிரச்சினைகள் இருக்கின்றனவா இல்லையா என்பதைப்பற்றி ஆராய்வதற்காகக் கூட வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கல்வி மாவட்ட ஆசிரியர் ஆலோசனைக் குழு ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் அமையும். இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது, பிரச்சனைகள் என்கிறபொழுது, அந்த ஆசிரியர்களைப் பொருத்து என்று நான் சொல்கிறபொழுது குழப்பங்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். அவைகளைக் காலா காலத்தில் தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். ஆனால், இந்தக் குழுக் கூட்டத்தில், சென்னைக்கு வந்து அரசினிடத்தில் பேச வேண்டிய பிரச்சினகளை அங்கே பேச ஆரம்பித்தால் அந்தக் கல்வி மாவட்ட ஆசிரியர் ஆலோசனைக் குழு எதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்தப் பயனை நாம் பெற முடியாது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்கின்ற முறையில் தனியார் நிறுவனங்களில் உள்ளவர்களுக்கும் இந்தக்குழுவில் பிரதிநிதித்துவம் உண்டா? மேலும், ஆதி திராவிடர் நலத் துறையால் நடத்தப்படும் உயர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் அந்த ஆசிரியர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருகின்ற முறையில் அவர்களும் இதில் பிரதிநிதிகளாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இதில் பிரதிநிதித்துவம் தரப்பட்டிருக்கின்ற ஆசிரியர் சங்கங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் ஆகும். அதில் எல்லாப் பள்ளிகளிலும் அமைப்பு வைத்து பொதுவான அமைப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் அதில் சொல்லலாம்; பள்ளிக் கல்வி இயக்குநரால் அமைக்கப்படும் அந்தப் பிரதிநிதிகளிடத்தில் சொல்லலாம். அதில் ஒரு ஆதி திராவிடருக்குப் பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம்.